இறக்காமம் பிரதேச சபை

அம்பாறை மாவட்டம்

--------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 06 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இறக்காமம் பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 11,500 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சாரக் கட்டணம், நீர் கட்டணம் மற்றும் தொலைபேசிக் கட்டணம் என்பவற்றிற்கு மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 15,884 கூட்டுமொத்த தொகைக்கு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 ஆண்டில் அன்பளிப்பாக பெறப்பட்ட கெப் வாகனத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ஏசியா பவுண்டேசன் மூலம் அன்பளிப்புச் செய்யப்பட்ட 57 நூலக புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| காணிகள் கட்டடிடங்கள் | 3,476,675 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| உபகரணங்கள் மற்றும் பொருத்துக்கள் | 21,890 | |
| மின்சாரப் பொருட்கள் | 57,600 | |
| இறைச்சிக் கடை குத்தகை நிலுவை | 535,277 | விபரமான பட்டியல், பதிவேடு மற்றும் குத்தகை நிலுவைப்பதிவேடு |

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ)1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி, வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 ஜனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்குடன் நிறைவான தீர்மானங்களை பெற்றுக்கொள்வதற்காகவும், மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழில்நுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்படவேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தும், 2014 மே 28 ஆந் திகதி வரை அதற்கிணங்க குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571(2) | ரூபா 151,470 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் சம்மந்தமாக 2014 மே 28 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 233,504 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,452,683 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,219,180 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134, 158 மற்றும் 159 ஆம் பிரிவுகளுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு இறுதிவரை வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவீடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் மீளாய்வாண்டிற்காக வீதவரியாகச் சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்ட ரூபா 165,000 தொகையில் 1.78% ஆன ரூபா.2,938 தொகையே அறவிடப்பட்டிருந்தது.

2.2.2 உத்தரவுப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் கடைகள் மற்றும் நிறுவனங்களை நடத்துவதற்கு உத்தரவுப்பத்திரக் கட்டணமாக அறவிடுவதற்காக மதிப்பிடப்பட்ட ரூபா 1,140,000 தொகையில் 41.8% ஆன ரூபா.477,360 தொகையே அறவிடப்பட்டிருந்தது.

2.2.3 ஏனைய வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவுக்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளைச் சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்து வதற்காக நிறுவிய 09 விளம்பரப் பலகைகளுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் பாவனைக் கட்டணங்களை அறவிடமுடியாது போய்விட்டது. இதனால் சபை வருடாந்தம் ரூபா.40,680 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

(ஆ) 2004 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவை ரூபா 1,032,223 தொகையை அறவிடுவதற்கு 2014 மே 28 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு இறுதிவரை ஒப்பந்தக்காரர் களிடமிருந்து அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா.739,505 தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு 2014 மே 28 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பிரதேச சபையின் எல்லைகளை அடையாளப்படுத்தவென 2012 ஆம் ஆண்டில் ரூபா 60,000 தொகைக்கு 04 பெயர்ப் பலகைகள் தயாரிக்கப்பட்டபோதிலும், 02 பெயர் பலகைகள் 2014 மே 27 ஆந் திகதி வரை உரிய இடங்களில் பொருத்தப்படாது சபையின் களஞ்சியத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

3.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

இறக்காமம் திறந்தவெளி சந்தைக் கட்டிடத்திற்கான மாதாந்த நீர் பாவனைக் கட்டணத்தை மாதாந்தம் செலுத்தத் தவறியதால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 1,743 தொகை மீளாய்வாண்டில் தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமை மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான முகாமைத்துவம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு